# வளர் தமிழ் ஆய்வு

யாதும் ஊரே

யாவரும் கேளிர்


பதிப்பாசிரியர்கள்

**சி. மைக்கேல் சரோஜினி பாய்**

**ப. பத்மநாப பிள்ளை**

**வ. இராசரத்தினம்**



வளர் தமிழ் ஆய்வு மன்றம்

திண்டுக்கல்

**2017**

ISBN NO : 978-81-920884-6-4

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | வளர் தமிழ் ஆய்வு<br>(கட்டுரைத் தொகுப்பு) |
| பதிப்பாசிரியர்கள் | : | சி. மைக்கேல் சரோஜினி பாய்<br>ப. பத்மநாப பிள்ளை<br>வ. இராசரத்தினம் |
| முதற் பதிப்பு | : | மே 2017 |
| தாள் | : | 18.6 மேப் லித்தோ |
| அளவு | : | டெம்மி |
| அச்சுரு | : | அகராதி 10 புள்ளி |
| பக்கம் | : | x + 320 |
| விலை | : | ரூபாய் 500/- |
| அச்சகம் | : | சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ்<br>சிவகாசி |
| உரிமை | : | பதிப்பாசிரியர்களுக்கு |
| வெளியீடு | : | வளர் தமிழ் ஆய்வு மன்றம்<br>பூங்குன்றன் பள்ளி வளாகம்<br>விவேகானந்தா நகர்<br>திண்டுக்கல் - 624 001<br>தமிழ்நாடு<br>தொ.பே. 0451-2427458 |

| | | |
|---|---|---|
| 101. | ஆ. மெர்சி ஆஞ்சலா<br>அப்பர் அடிகளின் நல்லொழுக்கச் சிந்தனைகள் | 126 |
| 102. | சி.மைக்கேல் சரோஜினி பாய்<br>தழை ஆடை - ஒரு பெண்ணியப் பார்வை | 130 |
| 103. | சி. யசோதா<br>நடையியல் நோக்கில் பாரதியார் கவிதைகள் | 135 |
| 104. | தி. யோகேஸ்வரன்<br>இறை நிலையும் தமிழின் சிறப்பும் | 140 |
| 105. | ம. ரமூலா ரூபி<br>திருக்குறளில் விழுமியங்கள் | 145 |
| 106. | மு. ராதிகா<br>பழந்தமிழர்களின் வழிபாட்டு முறைகள் | 150 |
| 107. | நா. ராஜலட்சுமி<br>கிருஷ்ணதாசி புதினம் காட்டும் தேவதாசி முறை | 153 |
| 108. | சி. ராஜலெட்சுமி<br>பெரிய புராணத்தில் சமயப் பூசல்கள் | 157 |
| 109. | செ. ராஜேஷ் கண்ணா<br>தற்கால புதுக்கவிதைகளில் உவமைகளின் வளர்ச்சி | 162 |
| 110. | நா. ரேணுகா<br>தமிழ்ப் பதிப்புலகில் மர்ரே. எஸ். ராஜம் | 166 |
| 111. | மா. லட்சுமிபிரியா<br>படைப்பாளர்களும் ஐக்கூவும் | 170 |
| 112. | பா. லயோலா ஜூலியட் மேரி<br>பற்றற்றோர் | 174 |
| 113. | ப. லாவண்யா<br>நீர்கொத்தி புதினம் காட்டும் தண்ணீர் பிரச்சினை | 179 |
| 114. | ரா. லிஜி<br>பழந்தமிழர் உணவுகள் | 183 |

# பற்றற்றோர்

ஒவ்வொரு சமுதாயத்திலும் தன்னலம் கருதாது பிறர்நலம் கருதும் இயல்புடையோர் காணப்படுகின்றனர். அத்தகையோர் இருந்தால்தான் சமுதாயம் சிறப்பெய்த முடியும். எனவே திருவள்ளுவர் அவர்களின் பெருமையைக் கூறும் முகமாக 'நீத்தார் பெருமை' எனும் அதிகாரத்தை வான்சிறப்பிற்கு அடுத்து அமைத்துள்ளார்.

மணக்குடவர் "நீத்தார் பெருமையாவது துறந்த முனிவரது பெருமையைக் கூறல். இது கடவுளரை வணங்கினாற்போல், முனிவரையும் வணங்க வேண்டும் என்பதனாலும் அவர் அதை அடக்கத்தக்கவர் என்ற கருத்தினாலும் அவையிற்றின் பின் கூறப்பட்டது" என்கிறார்.

"நீத்தாராகிய ஞானிகளிடம் உலக முழுதும் அடங்கியுள்ளது. அவர்கள் உலகை உலகு என்னும் பருப்பொருட்டன்மையில் மட்டும் உணராது சுவை முதலாகிய தன் மாத்திரைகளாயும் அவற்றின் காரியமாகிய ஐம்பெரும் பூதங்களாயும் செயலும் அறிவுமாகிய கருவிகளாயும் இவையனைத்தையும் சிந்தித்துணரும் மனமுதலான உட்கருவிகளாயும் இங்ஙனம் கருவிகளால் தத்துவங்களையறியும் உயிராகிய மூலப்பகுதியாகவும் உணருகிறார்கள். உணர்ந்து தெளிவுபெறுகிறார்கள். ஆதலால் அவர்கள் அறிவிலே உலகமே உறைகிறது" என்று தண்டபாணி தேசிகர் நீத்தாருக்கு விளக்கமளிக்கிறார்.

திருவள்ளுவர் அமைத்துள்ள நீத்தார் பெருமை அதிகாரம், தன்னலம் கருதாது பிறர்நலம் கருதுவோரது பெருமையைக் கூறுகிறது. வள்ளுவர் துறவிற்குத் தனி அதிகாரம் அமைத்திருந்தும் இங்கு நீத்தார்பெருமை எனும் அதிகாரத்தினையும் அமைத்துள்ளார். துறவு எனும் அதிகாரத்தில் துறவிகள் கடைபிடிக்க வேண்டிய தனிப்பட்ட நெறிகளைக் கூறியுள்ளார். துறவு அதிகாரத்தில் நீத்தார் எனும் சொல்லை எங்கும் கையாளவில்லை. ஆனால் நீத்தார்பெருமை எனும் அதிகாரத்தில் துறந்தார், நீத்தார் என்ற இருவகைச் சொற்களையும் கையாண்டுள்ளார். இதன் வழி 'நீத்தார் என்போர் இல்லத்தில் இருந்து கொண்டே பொதுநலம் புரிபவர்களா? அல்லது முற்றும் துறந்த துறவிகளா? என்பது குறித்த தெளிவான கருத்துகள் கிடைக்கப் பெறவில்லை. நீத்தார் என்போர் சாதாரண மானிடர்களைவிட எல்லா நிலையிலும் உயர்ந்த ஆன்றோர்களையே குறிக்கின்றது' எனக் கருத இயலுகிறது.

துறவானது இருநிலைகளில் கடைபிடிக்கப்படுகிறது. "ஒன்று, உலகை

---

**முனைவர் பா.லயோலா ஜூலியட் மேரி**
பாத்திமா கல்லூரி, மதுரை.